### வாசிப்பை ஊக்குவிக்கும் தவறவிடக் கூடாத நிகழ்வாக

# ‘தி.மு.க. 75 - அறிவுத் திருவிழா’வை நடத்திக்காட்டிய உதயநிதி ஸ்டாலின் - இளைஞர் அணித் தம்பிமார்களுக்கு பாராட்டுகள்!

## முற்போக்கு புத்தகக் காட்சியைப் பார்வையிட்டு – வலைதளத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!





**சென்னை, நவ.18-**

**“தி.மு.க. 75 அறிவுத் திருவிழா”-வில் அமைக்கப்பட்டுள்ள முற்போக்கு புத்தகக் காட்சியைப் பார்வையிட்டது குறித்து, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளதாவது:-**

தி.மு.க. 75 அறிவுத் திருவிழா முற்போக்குப் புத்தகக் காட்சி: கொள்கைக் கருவூலம்!

வள்ளுவர் கோட்டத்தில் இரண்டு மணி நேரத்துக்கு மேல் இருந்து திராவிடம், அம்பேத்கரியம், கம்யூனிசம், பெண்ணியம் என அணிவரிசையில் அமைந்த ஐம்பதுக்கும் மேற்பட்ட அரங்குகளைப் பார்வையிட்டு, அங்கு வந்திருந்த வாசகர்கள், ஆர்வலர்கள், பதிப்பகத்தாருடன் உரையாடியது மனநிறைவளிக்கும் அனுபவமாக அமைந்தது.

குறிப்பாக, ‘Carry on, but remember’ எனும் பேரறிஞர் அண்ணா அவர்கள் நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரைகளின் தொகுப்பைக் கண்டதும் நம் அண்ணன் அன்று விடுத்த எச்சரிக்கை இன்றைய ஒன்றிய ஆட்சியாளர்களுக்கும் பொருத்தமாக இருக்கிறதே என வியந்தேன். என் பங்கிற்கு, அறுபதுக்கும் மேற்பட்ட நூல்களை வாங்கிவிட்டேன்.

வாசிப்பை ஊக்குவிக்கும் தவறவிடக் கூடாத நிகழ்வாக இதனை நடத்திக் காட்டியுள்ள திரு. உதயநிதி ஸ்டாலின் மற்றும் அவரது தி.மு.க. இளைஞர் அணி தம்பிமார்களுக்கு மீண்டுமொரு முறை எனது பாராட்டுகள்! வரும் ஆண்டுகளிலும் தொடரட்டும் அறிவுத்திருவிழா!

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (16.11.2025) ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கில் நடைபெற்ற ”சென்னை ஈ–ஸ்போர்ட்ஸ் குளோபல் சாம்பியன்ஷிப் 2025 (Chennai Esports Global Championship 2025) போட்டியின் இரண்டாம் கட்டமாக நடைபெற்ற பி.ஜி.எம்.ஐ. போட்டியில் வெற்றி பெற்ற அணிகளுக்கு கோப்பை மற்றும் பரிசுகளை வழங்கினார். இந்நிகழ்வில் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.



திருச்சி மாவட்டம், கிராப்பட்டியில் உள்ள புனித தோமையார் முதியோர் இல்லத்தைச் சேர்ந்த நிர்வாகிகள் தங்களது முதியோர் இல்லத்திற்கு அவசர உதவிக்கு ஆம்புலன்ஸ் தேவை வேண்டி முதலமைச்சர் அவர்களிடம் வைத்த கோரிக்கையை தொடர்ந்து அமைச்சர் கே.என்.நேரு முதியோர் இல்லத்திற்கு புதிய ஆம்புலன்ஸ் சேவையை வழங்கினார். கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



## தி.மு.க. இளைஞர் அணி

### புதிய நிர்வாகிகளுக்கான 2026 தேர்தல் பணி பயிற்சி பாசறைக் கூட்டம்

### இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவுறுத்தலின் பேரில், 2026 சட்டமன்றத் தேர்தல் பணிகள் குறித்து, புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகளுக்கான பயிற்சிப் பாசறைக் கூட்டங்கள், பகுதி வாரியாக நடைபெற உள்ளன. மண்டலம்–1, சென்னை வடக்கு மாவட்டத்துக்கு உட்பட்ட இராயபுரம் கிழக்குப் பகுதி, மேற்குப் பகுதி, பெரம்பூர் வடக்குப் பகுதி, தெற்குப் பகுதி, ஆர்.கே.நகர் கிழக்குப் பகுதி மற்றும் மேற்குப் பகுதி ஆகிய பகுதிகளில் பயிற்சிப் பாசறைக் கூட்டம் கீழ்க்காணும் தேதிகளில் நடைபெற இருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | பகுதி | இடம் |
|---|---|---|---|
| 22.11.2025 சனிக்கிழமை | மாலை 5.00 மணி | பெரம்பூர் தெற்குப் பகுதி | சீலம் மஹால், எத்திராஜ் சாமி சாலை, கொடுங்கையூர். |
| 23.11.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 9.00 மணி | ஆர்.கே.நகர் மேற்குப் பகுதி | மரியம் மாளிகை, எண்ணூர் நெடுஞ்சாலை, கொருக்குப்பேட்டை |
| | மாலை 5.00 மணி | இராயபுரம் மேற்குப் பகுதி | ஸ்ரீபேலஸ் திருமண மண்டபம், சூரிய நாராயண தெரு, இராயபுரம் |

அன்பகம்
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 12.11.2025

கலைஞர் 100 1924 - 2023

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி

### அனைத்து வாய்க்கால்களும் தூர்வாரப்பட்டுள்ளன!

# கரூர் மாவட்டத்தில் விவசாயிகள் முழுமையாக நீரை பயன்படுத்துகின்றனர்!

## எடப்பாடியின் குற்றச்சாட்டுக்கு வி.செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. பதில்!



*கரூர், நவ. 18 -*

*கரூர் மாவட்டத்தில் அனைத்து வாய்க்கால்களும் தூர்வாரப்பட்டு விவசாயிகள் முழுமையாக பாசனத்திற்கு நீரை பயன்படுத்தி வருகின்றனர் என எடப்பாடி பழனிச்சாமியின் பொத்தாம் பொதுவான பொய்க் குற்றச்சாட்டுக்கு செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. பதில் அளித்தார்.*

*கரூர் சட்டமன்ற தொகுதி பாப்புலர் முதலியார் வாய்க்கால் தூர்வாரும் பணிகளை கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி. செந்தில் பாலாஜி பார்வையிட்டார். பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:*

*விவசாய பெருமக்களின் கோரிக்கையை ஏற்று தமிழ்நாடு முழுவதும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஒவ்வொரு ஆண்டும் நிதியை வழங்கி தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கரூர் மாவட்டத்தில் இதுவரை 81 பணிகளுக்கு ரூ.15 கோடி அளவுக்கான நிதியை வழங்கி பாப்புலர் முதலியார் வாய்க்கால், புகலூர் வாய்க்கால், நெரூர் வாய்க்கால், புதிய கட்டளை மேட்டு வாய்க்கால் என பல்வேறு வாய்க்கால்கள் மாவட்டம் முழுவதும் தூர்வாரும் பணிகள் நீர்வளத் துறை மூலமாக சிறப்பாக செய்து வரப்படுகிறது.*

*எடுத்துக்கொள்ளப்பட்ட பணிகள் தூர்வாரிய பின்னர் வாய்க்காலில் தண்ணீர் திறந்து விட்ட பிறகு நான்கு மாதம் ஐந்து மாதம் தண்ணீர் செல்கின்ற நேரத்தில் மீண்டும் செடிகள் வளர்ந்து சுத்தம் செய்து தரவேண்டுமென விவசாய பெருமக்கள் கோரிக்கை வைத்ததன் அடிப்படையில், அந்த பணிகளும் தற்போது நடைபெற்று வருகின்றன. பாசனத்திற்கான நீர் என்பது முழுமையாக விவசாயிகள் விரும்பக்கூடிய வகையில் அதற்கான பணிகளை அரசு தனது கடமையாக கொண்டு செய்து வருகிறது. விவசாயிகளின் முழுமையான கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.*

*எதிர்க்கட்சித் தலைவர் இது குறித்து குறைகூறி வருவதை பற்றி கேட்கிறீர்கள். அவர் எந்த வாய்க்காலை போய் பார்த்தார். எத்தனை வாய்க்காலை பத்திரிகையாளர்களை அழைத்து சென்று காண்பித்து இதெல்லாம் தூர் வார வில்லை என்று சொன்னார்?. அப்படிச் சொன்னால் உண்மை நிலவரம் தெரியவரும்.*

*ஆனால் மேட்டூர் அணையில் தண்ணீர் திறந்து விடப்படுகிறது என்று செய்தி வந்தால் போதும், உடனே உட்கார்ந்த இடத்தில் இருந்து கொண்டு பொத்தாம் பொதுவாக ஒரு கருத்தை கூறுகின்றார்.*

*ஒவ்வொரு காலகட்டத்திலும் ஒரு அறிக்கை கொடுத்துவிட்டு, அதன் பின்னர் ஏதோ இவர் சொல்லித்தான் நடக்கிறது என்பதைப் போன்ற ஒரு சூழலை ஏற்படுத்துகின்றார். இருக்கும் உண்மை சூழலை பார்த்து ஆய்வு செய்து ஆரோக்கியமான கருத்துக்களை கூறினால் அது பொருத்தமாக இருக்கும் . ஒவ்வொரு வருடமும் மேற்கொண்ட பணிகள் குறித்து என்னிடமும் புள்ளி விவரம் உள்ளது. கூறுகிறேன்.*

*2021-22ம் நிதியாண்டில் ரூ. 1.60 கோடியில் 10 பணிகள். 2022-23 ரூ.2.32 கோடியில் 15 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 2023 - 24 ஆம் ஆண்டில் எடுத்துக்கொள்ளப்பட்டவை ரூ.4.08 கோடியில்18 பணிகள், 2024-25ல் ரூ 2.76 கோடியில் பணிகள் 14. முழுமையாக முடிக்கப்பட்டுள்ளது. 2025 - 26 ல் ரூ.4..31 கோடி மதிப்பில் பணிகள். இந்த ஆண்டு 24 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. ஒவ்வொரு வருடமும் அதற்கான நிதியை ஒதுக்கீடு செய்து தூர்வாரும் பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.*

*விவசாயிகளும் முழுமையாக பாசனத்திற்கு நீரை பயன்படுத்தி வருகிறார்கள். எதிர்க்கட்சித் தலைவரின் கூற்றில் ஏதாவது இருந்தால் விவசாயிகளும் அந்த கருத்தை கூறியிருப்பார்களே. அப்படி எதுவுமில்லை. மேலும் விடுபட்ட பகுதிகள் எதுவும் இருந்தால்கூட விவசாயிகள் கோரிக்கை வைக்கும் போது அதையும் அரசு நிறைவேற்றி வருகிறது.*

*ஒன்றிய அரசு நிதி தர மறுக்கிறது அதைப்பற்றி கேட்க தைரியம் இல்லை. நிதி ஆதாரம் குறைவாக இருந்தாலும் கூட சொந்த நிதியை பயன்படுத்தி தூர்வாரும் பணிகளுக்கு இந்த அரசு முக்கியத்துவம் அளிக்கிறது.*

*தூர்வாரும் பணிகள் மட்டுமின்றி, கரூர் மாவட்டத்தில் கட்டுமான பணிகள் ஆண்டாங்கோவில் கீழ்பாகம் , மேல் பாகம் வாய்க்கால்கள் தடுப்புச் சுவர் கட்டுதல் உள்ளிட்ட ரூ.117 கோடி மதிப்பீட்டில் நான்கு ஆண்டுகளில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன. இது தவிர புகலூர் பகுதியில் கட்டக்கூடிய காவிரி தடுப்பணைக்கு ஆண்டுதோறும் தேவையான நிதியை அரசு தொடர்ந்து ஒதுக்கீடு செய்து பணிகள் நடைபெற்று வருகிறது. கூடுதலாக கேட்கப்படும் நிதியையும் அரசின் கவனத்திற்கு கொண்டு சென்றிருக்கிறோம். நிதி வழங்குவதற்கு அரசு விரைவில் ஒப்புதல் வழங்கும். நீர்வளத் துறை பொதுப்பணித்துறையை பொறுத்த வரை மிகச் சிறப்பாக கரூர் மாவட்டத்தில் பணிகளை மேற்கொண்டு வருகிறார்கள். அனைத்து வாய்க்கால்களும் தூர்வாரப்பட்டு முழுமையாக பாசனத்திற்கு தண்ணீர் சென்று கொண்டிருக்கிறது. முழு அளவில் விவசாயிகள் பயன்பெற்று வருகின்றனர்.*

*இவ்வாறு செந்தில் பாலாஜி கூறினார்.*



திருச்சி தெற்கு மாவட்டச் செயலாளர் – அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி SIR கீழ் திருவெறும்பூர் தொகுதி, அரியமங்கலம் விஸ்வாஸ் நகரில் அமைந்துள்ள தனது இல்லத்திகு வருகை புரிந்த பாக எண் 147 உட்பட்ட வாக்காளர் பதிவு அலுவலரிடம் (BLO) ஆவணங்களை சமர்ப்பித்து, திருவெறும்பூர் தொகுதி பட்டியலில் தனது பெயரை உறுதிப்படுத்திக்கொண்டார். இந்நிகழ்வின் போது மாநகரக் கழகச் செயலாளர் மு.மதிவாணன், பகுதிக் கழகச் செயலாளர் விஜய் குமார், வட்டக் கழக செயலாளர் சண்முகம், மற்றும் பாக முகவர் மற்றும் பாக டிஜிட்டல் முகவர் ஆகியோர் உடன் இருந்தனர்.





கோவை, கொடிசியா மைதானத்தில், கோவையின் பெருமையை கொண்டாடும் விதத்தில் 18வது வண்ணமயமான ஸ்கைடேன்ஸ் நிகழ்வை கழக மேற்கு மண்டலப் பொறுப்பாளர், வி.செந்தில் பாலாஜி துவக்கி வைத்தார். இதில் மாவட்ட ஆட்சியர் பவன்குமார் ஜி.கிரியப்பனவர், மாநகர் மாவட்டப் பொறுப்பாளர் துரை.செந்தமிழ்ச் செல்வன், மேயர் கா.ரங்கநாயகி ராமச்சந்திரன், கழக மாணவர் அணி செயலாளர் வழக்கறிஞர் இரா.ராஜீவ் காந்தி, கழக தகவல் தொழில்நுட்ப அணி இணைச் செயலாளர் டாக்டர். ஆர்.மகேந்திரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஏர்போர்ட் ராஜேந்திரன் உள்பட கோவை மாவட்ட தொழில் முனைவோர்கள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு தஞ்சாவூர் சட்டமன்றத் தொகுதியின் சார்பில் சட்டமன்ற உறுப்பினர் டி.கே.ஜி.நீலமேகம் எம்.எல்.ஏ., தஞ்சாவூர் மேம்பாலம் செவித்திறன் குறைபாடு உடையோர் பள்ளியில் மதியம் அசைவ உணவு வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் மாவட்டச் செயலாளர் துரை. சந்திரசேகரன் எம்.எல்.ஏ., நாடாளுமன்ற உறுப்பினர் முரசொலி எம்.பி., மேயர் இராமநாதன், துணை மேயர் அஞ்சுகம் பூபதி, கீழவாசல் பகுதி செயலாளர் நீலகண்டன் எம்.சி. ஆகியோர் உடன் இருந்தனர்.